8th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி பார்லிமென்டில் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இது அங்கே கேள்வி கேட்டு விடை அளிக்கப்பட வேண்டிய விஷயம்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த விபத்துக்குக் காரணமான அன்னசமுத்திரம் ஏரியை ரயில்வே இலாகாவினர் "அபெக்டிங் டாங்க்" என்று பல ஆண்டுகளுக்கு முன்பே பிரகடனப்படுத்தி யிருந்தும், இதில் இருக்கிற ஏரிக்கரையை எம்பாங்க்மெண்டை இன்னும் மூன்று அடி உயர்த்த வேண்டுமென்று நெடுநாட்களுக்கு முன்பு நம் மாநில அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தும் அதை உயர்த்தாத காரணத்தினால்தான் இந்த விபத்து நடந்தது என்பதை அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த ஏரியைப் பொறுத்த வரையில் அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. அரசாங்கம் ஏதோ தவறிவிட்டது என்ற குற்றத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த விபத்து, அன்னசமுத்திரம் கண்மாய் உடைந்ததால் ஏற்பட்டது. ரெயில்வே "அபெக்டிங் டாங்க்" என்று பிரகடனப்படுத்தி அவர்கள் எழுதிய டைரக்ஷன்ஸ் இந்தச் சர்க்காரிடம் இருக்கிறது. ஆறு ஆண்டுகளாக அதை உயர்த்தாததால், மாக்சிமம் லெவல் பிடிக்காதிருப்பதால் இவ்வளவு உயிர்கள் பாதிக்கப்பட்டன. பல உயிர்கள் பற்றிய விவகாரம் இது. உயர்த்தியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ரெயில்வே அதிகாரிகள் அப்படி ஒரு உத்தரவு போட்டார்களா என்பதைப்பற்றி அந்த இலாகாவோடு தொடர்பு கொண்டு இந்தச் சபைக்கு சமர்ப்பிக்குமாறு தாங்கள் உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சபாநாயகர் அவர்கள் உத்தர விட்டால் அரசாங்கம் அதை கவனிக்கும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: இந்த பள்ளிப்பட்டி ரெயில் விபத்தின்போது முதல் உதவி செய்யச் சென்ற அடுத்த ரெயில் விபத்துக்கு உள்ளானது உண்மையா? அதில் ஏற்பட்ட சேதங் கள் எவ்வளவு? காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

Quarterly list of Gazetted Officers

* 175 *Q.*—Sri M. SHUNMUGAM: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to revive the publication of the quarterly list of Gazetted Officers in the Madras State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: It has been decided to revive the publication of the Quarterly Civil List.

[8th March 1965

காலாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்பட்டு வந்த அரசிதழ் பதிவு பெற்ற சிவில் அலுவலர் பட்டியலை மீண்டும் வெளியிடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Rebate on handloom cloth

* 176 Q.—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the amount of rebate granted for the sale of handloom cloth up to 30th September 1964?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ரூபாய் 36,99,773.93.

திரு. எம். வி. கரிவேங்கடம்: கடந்த ஒரு வருடமாகப் பொங்கலுக்குக் கொடுக்கப்படுகிற விசேஷ ரிபேட், "கைத்தறி வாரம்" என்று ஒரு வாரம் ஏற்படுத்தி அப்போது கொடுக்கப்படுகிற விசேஷ ரிபேட், நிறுத்தப்பட்டிருப்பது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த வருஷம் நிறுத்தப் பட்டது.

திரு. எம். வி. கரிவேங்கடம்: அப்படி நிறுத்தப்பட்டதற்குக் காரணமென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த ஆண்டு ஜனவரி மாதம் பொங்கலின்போது தேக்கம் அதிகமாக இல்லை. அதனால் நாம் கைத்தறி விழா வழக்கப்படி கொண்டாடும்போது கூடுதலாக 7 நாள் என்பதற்குப் பதில் 15 நாட்களுக்குக் கொடுக்கலாம் என்று—இதற்கு முன்பும் நடந்திருக்கிறது—அந்தமாதிரி செய்ய உத்தேசித்திருந்தோம். கலவரங்கள் காரணமாகக் கைத்தறி வாரம் நடத்தப்படவில்லை. அதனால் ரிபேட் கொடுக்கப்படவில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு நேரடியாக அவர்களுக்கு இந்த ரிபேட் சலுகை கிடைக்கும்படி செய்வதற்கு ஏதாவது உத்தேசமுண்டா? இப்போதுள்ள நிலையில் வாங்குபவர்களுக்குத்தான் அந்தச் சலுகை இருக்கிறது. உற்பத்தி செய்யக் கூடிய நெசவாளர்களுக்கு அல்லது மாஸ்டர்களுக்கு இந்தச் சலுகை போகும்படி ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தவிதமான உத்தேசம் இல்லை.

திரு. டி. எல். சசிவர்ண தேவர்: "கைத்தறி வாரம்" மீண்டும் நல்ல சூழ்நிலையில் கொண்டாடி இந்தமாதிரி ரிபேட் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எப்ரல் 4-ம் தேதியில் இருந்து கொண்டாடுவதற்கு உத்தேசித்திருக்கிறோம்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: இந்த ரிபேட் முறையானது இப்போது கைத்தறி பிரதம நெசவாளர்கள் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பல தவறான பில்கள் போடப்படுகிறது என்று சொல்லி பல மாதங்கள் கழித்து கண்டு